செம்மணி

நிலம் 3 துகள் 142 வள்ளுவர் ஆண்டு 2052, 08 - 14 சித்திரை 2023 வாரமலர் பக்கங்கள் 16



# பட்டிருப்பும் பறிபோகுமா...?

ரவீந்திரன்

"காணிக் கள்ளன் பிள்ளையான் வெளியேறு" என்று சாணக்கியன் கோஷமிட்டார். சாணக்கியனுடன் அங்கு கூடியிருந்த வர்களும் அவர்களது குடும்பங்களும் சேர்ந்து வாக்களித்தால்கூட சாணக்கியன் வெல்லப்போவ துமில்லை பிள்ளையான் தோற்கப்போவ துமில்லை என்பது மட்டக்களப்பு மக்களுக்கு நன்கு தெரியும்

கடந்த மாதம் 30ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் (பிள்ளையான்) மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடந்தது. அப்போது அந்த மாவட்ட செயலக வாசலில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தலைமையில் பொதுமக்கள் சிலர் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதில் "காணிக் கள்ளன் பிள்ளையான் வெளியேறு" என்று சாணக்கியன் கோஷமிட்டார். சாணக்கியனுடன் அங்கு கூடியிருந்தவர்களும் அவர்களது குடும்பங்களும் சேர்ந்து வாக்களித்தால்கூட சாணக்கியன் வெல்லப்போவதுமில்லை பிள்ளையான் தோற்கப்போவதுமில்லை என்பது மட்டக்களப்பு மக்களுக்கு நன்கு தெரியும். 2020பொதுத் தேர்தலின்போது சிறைக்குள் இருந்தபடியே தன்னை வேட்பாளராகப் பதிவு பெருவெற்றி பெற்றவர் பிள்ளையான். தமிழ் அரசுக் கட்சி, புளொட், ரெலோ எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அவ்வாறு வெல்ல முடியவில்லை. அவர்களின் வெற்றிகள் அரும்பொட்டு வெற்றிகளாகத்தான் இருந்தன. பிள்ளையான் கடந்த தேர்தலில் வென்ற கற்குடா தொகுதியையும் தாண்டி சாணக்கியனின் பேரனான ராசமாணிக்கத்தின் பட்டிருப்புத் தொகுதியையும் வென்றுவிடுவார் என்ற அச்சமே சாணக்கியனுக்குத் தற்போது எழுந்துள்ள பயம். அதன் பிரதிபலிப்பே பிள்ளையானுக்கு எதிரான தற்போதைய கோஷத்தின் பின்னணி. 2006இல் விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்குப் பிராந்தியத்தை அரச படைகள் கைப்பற்றின. 2008இல் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் பிள்ளையான் வெற்றி பெற்றுப் புலிகள் இயக்கம் உயிர்ப்புடன் இருக்கும்போதே கிழக்கு மாகாண முதலமைச்சரானார்.



ளது என்பதை முன்வைத்தே பிள்ளையானுக்கு எதிராகச் சண்டை பிடிக்கும் அளவுக்குச் சாணக்கியனின் நிலமை மாறியிருக்கிறது. இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் வெளியானபோது சாணக்கியனின் அடாவடித்தனமே அதிகமாகத் தெரியவந்தது. சாணக்கியன் கூட்ட மண்டபத்துக்குள் நுழைந்து கத்தியபோதிலும் ஆயுதப் போராட்டத்திலும், அரசியலிலும் பட்டறிவைக் கொண்டிருக்கும் பிள்ளையான் அதை மிகச் சாதாரணமாக எதிர்கொண்டதையும் அவதானிக்க முடிந்தது.

**சாணக்கியனின் தமிழ்த் தேசியம்**

சாணக்கியன் தமிழ்த்தேசியவாதியும் அல்ல புலிகளுடன் சேர்ந்து போராடியவரும் அல்ல. மகிந்த ராஜபக்சவின் கட்சியில் சேர்ந்து வெற்றிலைச் சின்னத்தில் தேர்தலில் அவர் களமிறங்கியது மட்டக்களப்பு மக்களுக்கு இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது. அப்போது அவர் தோல்வியடைந்தார். அதேவேளை சாணக்கியனின் குடும்பம் சிங்களக் குடும்பங்களுடன் திருமண உறவுகளை வைத்திருக்கும் நிலையில் (தாய் சிங்கள இனத்தவர்) சாணக்கியனைச் சிங்களவருடனும் சிங்கள ஆட்சியாளர்களுடனும் இணைத்துப் பார்க்கும் நிலையே மட்டக்களப்பு மக்கள் மத்தியில் உண்டு.

சாணக்கியனின் பேரனான இராசமாணிக்கம் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவர். பட்டிருப்புத் தொகுதியில் துறைநீலாவணை, கல்லாறு, பெரிய கல்லாறு, கோட்டைக்கல்லாறு ஆகிய பிரதேச மக்கள் தமிழ் அரசுக்கட்சிக்கு ஆதரவளிப்பவர்கள். சாணக்கியன் தனது பாட்டனாரின் அரசியலைத் தொடராது மகிந்த ராஜபக்சவின் கட்சியில் இணைந்து தேர்தலில் குதித்தது அந்தப் பகுதி மக்களுக்கு அதிருப்தியே. பின்னர் அவர் தமிழ் அரசுக் கட்சிக்கு மாறித் தேர்தலில் வென்றிருந்தாலும் பட்டிருப்பு மக்களுக்குப் பொருளாதார முன்னேற்றம் அளிக்கும் வகையில் அவர் எதையும் செய்யவில்லை. இந்த அதிருப்தி சூழலை மடைமாற்றுவதற்கே சாணக்கியன் முயன்று வருகிறார்.

சாணக்கியனுடன் ஒப்பிடும்போது பிள்ளையான் மட்டக்களப்பு மக்களுக்கு நல்லது செய்வது அதிகம் என்பதும் சாதாரணமாக யாரும் அணுகக்கூடியவர் என்பதும் சாணக்கியனுக்குப் பிரச்சினையாக உள்ளது. சாணக்கியனின் தற்போதைய காணிக்கள்ளன் குமுறல் என்பது அவரது மட்டுமல்ல தமிழ் அரசுக் கட்சிக்கும் மட்டக்களப்பில் ஏற்பட்ட பின்னடைவையே வெளிக்காட்டுவதாக உள்ளது.

**2012இல் சம்பந்தனின் நிலைப்பாடு**

2012இல் 2ஆவது தடவையாகக் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தது. அதில் பிள்ளையான் தோல்வியடைந்தார். கிழக்கு மாகாணசபைக்கு முதலமைச்சர் ஒருவரை முன்மொழியுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கேட்டபோது, ஹாபிஸ் நசீர் என்கிற முஸ்லிம் ஒருவரை முதலமைச்சர் ஆக்கினர். இது மட்டக்களப்புத் தமிழ் மக்களுக்குப் பெரியளவிலான அதிருப்தியைக் கொடுத்தது. முதலமைச்சர் ஆகுவதற்காகக் ஹாபிஸ் நசீர் தரப்பிலிருந்து கூட்டமைப்புக்குப் பல கோடி ரூபா கையூட்டு வழங்கப்பட்டது என்று இன்றுவரை கதைகளுண்டு.

தற்போது தமிழ் அரசுக் கட்சி அரசியலில் பெரிய பின்னடைவைச் சந்தித்திருக்கும் சூழலில் தமிழருக்கான அரசியல் தீர்வையோ பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதையோ கல்முனை பிரதேச செயலக விடயத்தில் தமிழருக்கான தீர்வைப் பெறுவதிலோ அபிவிருத்தி வேலைகளை மக்களுக்கு வழங்குவதிலோ எதுவும் இயலாத நிலையில் இருக்கிறது. இந்த நிலையில் பிள்ளையான் காணிக் கள்ளன் என்ற கோசத்துடன் சாணக்கியன் களமிறங்கியிருப்பது சாணக்கியனின் தனிப்பட்ட அரசியல் லாபத்துக்காகவே தவிர பொதுமக்களின் நலனுக்காக அல்ல என்பது தெரிகிறது. பொதுமக்களின் நலன் என்ற போர்வையில் சாணக்கியனின் தனிப்பட்ட பகையும், அரசியல் பழிவாங்கலுமாகவே இந்தக் 'காணிக் கள்ளன்' கோசம் இருக்கிறது. கூட்டமைப்பு பலமிழந்திருக்கிற நிலையில் சாணக்கியனின் பட்டிருப்புத் தொகுதியும் பிள்ளையானின் கைக்கு மாறிவிடும் அபாயமுள்




செம்மணி
08 - 14 சித்திரை 2023
வாரமலர்


# நீலப்பெருமாள் பரம்பரையும் தம்பி முதலியின் உரிமையும்

ஜேம்ஸ் ரி.இரத்தினம்

(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜேயவர்த்தனா ஆகியோரின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரைகளின் தொகுப்பு)

03




இலண்டனில் உள்ள பிரித்தானிய அருங்காட்சியகத்தில் விஷேட கையெழுத்துப் பிரதிகள் பிரிவு ஒன்று உண்டு. ஆளுநர் நோரத்தினால் மார்க்ஸ் வெஸ்லிக்கு எழுதிய கடிதம் ஒன்று இப்பிரிவிலே காணப்படுகிறது. முதலிமார்கள் குறித்த கூர்மையான அவதானிப்புகள் அக்கடிதத்தில் காணப்படுகின்றன. அடுத்தடுத்து வரும் தலைமுறையினருக்கு அத்தகவல்கள் பயனுடையவையாகும்.

''மஹா முதலியார் ஆளுநருக்கு மிக நெருங்கிய அதிகாரியாவார். அவர்கள் ஓர் அமைச்சருக்கு இணையான அதிகாரமுடைய உயர் பதவி வகித்த வம்சாதிபதிகள் ஆவார்கள். அவ்வாறெனினும் அவர்கள் ஒருபோதும் என்னருகே ஆசனத்தில் அமர்ந்ததில்லை. காலணிகள் அணிந்தும் என்னருகே வருவதில்லை. நான் இடும் எந்த ஆணையையும் விரைந்து நிறைவேற்ற அவர்கள் முனைந்து நின்றார்கள். நாட்டில் இடம்பெறும் எந்த நிகழ்வினையும் உடனடியாக எனக்கு அறியத் தந்தார்கள். மஹாமுதலி மற்றும் கனிஷ்ட முதலிமார்கள் அதிக ஊதியத்தை எதிர்பார்ப்பதில்லை. தமது சேவைகளுக்காக வழங்கப்படும் சிறிய தொகையைப் பெற்றுக்கொண்டு அவர்கள் திருப்தியுற்றார்கள். எனினும் தமது சேவைகளுக்காக கஸ்தான எனப்படும் வாள், பதக்கங்கள், தங்கச் சங்கிலிகள் போன்றவற்றை வழங்கி தாம் கௌரவிக்கப்படுவதைப் பெரிதும் விரும்பினார்கள். இப்படி விருது பெறுவதனால் அவர்கள் பெரிதும் பெருமை கொள்வதனால் இதன்மூலம் அவர்களிடம் வேலை வாங்குவது எப்படி என்பதையும் டச்சு ஆளுநர்கள் நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். (இராஜரீக ஆசிய சங்கத்தின் இலங்கைத் தகவல் தொகுப்பு **1953**, புதிய வெளியீடு **3**ஆம் தொகுப்பு, **20**ஆம் அத்தியாயம், **143**ஆம் பக்கம்)


இது அன்று நிலவிய நிலைவரத்தின் உண்மையான படப்பிடிப்பு. பதக்கங்கள் சேகரிக்கும் இந்தக் கீழ்ப் படிவுள்ள முதலிமார்கள், வெற்றுக் கால்களுடன் தாம் தமது எஜமானர்களை அணுகும் விதமாகவே பொது

மக்களும் அடிமைகளைப்போல தம்மிடத்தில் வர வேண்டும் என்ற கடுமையான எதிர்பார்ப்பைக் கொண் டிருந்தார்கள். மனிதத் தன்மையின்றிக் கொஞ்சமேனும் இரக்கமுமின்றி சாதாரண மக்களைப் போட்டு மித்தனர். ஆட்சியாளர்களையும் பொதுமக்களையும் பிரிக்கும் பிரதான தடையாக அவர்களே இருந்தனர். உண்மையில் பொதுமக்களின் அனைத்து உரிமைகளையும் தமது இரும்புக் காலணிகளில் போட்டு மிதித்தவர்கள் அவர் களே.

புதிதாக உயர்ந்த பதவிகளுக்கு வந்த இந்தக் கறுப்பு அடிமை ஆட்சியாளர்கள் தமக்குக் குற்றவேல் செய்த சாதாரண மனிதர்களை விளித்ததும் மிகவும் கீழ்த்தரமான சொற்களினாலேயே. சீலமற்ற அம்மொழியின் மிச்ச மீதங்கள் இன்னமும் சில மேற்றட்டு வர்க்கக் குடும்பங் களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் இந்த உயர் குடும்பத்தினர் பற்றிய மூட நம்பிக்கைகள் மெல்ல மெல்ல அகன்று வருவது ஒரு நற்பேறு ஆகும். கீழ்நாட்டுச் சிங்கள வம்சாதிபதிகள் அத்தகைய உயர் குடி மக்கள் அல்லர் என்பதோடு பலர் சிங்களவர்களும் அல்லர் என்பது இனிமேலும் இரகசியம் அல்ல.

பட்டம் பதவி பெற்றவர்களில் சிலர் தமது ஏமாற்று வித்தைகளில் இருந்து இன்னமும் விடுபட முடியாமல், தம்மை ஹாமு என்று அயலவர்களை வற்புறுத்துகின்றனர். அவ்வாறு அழைப்பவர்களுக்கு உதவி, உபகாரங்கள் புரிகின்றனர். துரதிர்ஷ்ட வசமாக அவர்களுக்கு இணை யாக, புதிதாகப் பொருள் ஈட்டிக்கொண்டுள்ள குடும் பத்தவர்களும், சாதியிற் குறைந்தவர்கள் எனப்பட்ட வர்களும், முன்னர் பௌத்த குருமாரை நிந்தித்தவர்களும் இப்போது புதிய ஹாமுக்களாகும் போட்டியில் இறங்கி யுள்ளனர். இந்தப் போராட்டத்திலே அவர்கள் ஏற்படுத் தியுள்ள விரும்பத்தகாத விளைவுகளின் காரணமாகத் தற்கால சமூகத்திலிருந்து ஹாமுக்கள் மெல்ல விலகி வருகின்றனர்.


எஸ்.டபிளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் தந்தையார் சேர் சொலமன் டயஸ் அபேவிக்கிரம ஜயதிலக்க செனவிரத்ன இராஜகருணா டடுகொறு பண்டாரநாயக்கவும் தாயார் டெய்சி எஸ்லைன் ஒபயசேகரவும்


எஸ்.டபிளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க

எல்லாப் பண்ணையடிமைச் சமூகங்களையும்போலவே இலங்கையிலும் சாதாரண குடிமக்களுக்கு அடிப்படை மனித உரிமைகள்கூட இருக்கவில்லை. அரண்டுபோன மந்தைக்கூட்டமொன்று எவ்வாறு மேய்க்கப்படுமோ அவ்வாறே மக்களும் நடத்தப்பட்டார்கள். சென்னை யிலிருந்துத கிழக்கிந்திய நிறுவனம் ஊடாக இலங்கையை ஆட்சி செய்த அதிகாரிகளின் நடத்தைகள் அருவருக் கத்தக்க நிலைக்குத் தள்ளப்பட்டன. இதன் காரணமாக அவர்களுடைய இடத்துக்கு, அவர்களைவிடக் குறைந்த தரத்திலான தேசிய முதலிமார்கள் நியமிக்கப்பட்டார்கள். தெரியாத பேயைவிடத் தெரிந்த பேய் எப்போதும் நல்லது என்றே இந்த நடவடிக்கை மக்களை எண்ணத் தூண்டியது.

எது எப்படியோ முதலிமார்களில் பல வகைப்பட்ட வர்கள் இருந்தார்கள். அந்நாட்களில் முதலி பதவி வகித்த பிலிப் குடும்பத்தினர் பாரம்பரியக் கல்வி அறிவு பெற்றவர்களாக இருந்தார்கள். அதன் காரணமாக மிகுந்த நேர்மையானவர்களாக இருந்தார்கள். உயர் போதனைகளால் உருவாக்கப்பட்டவர்கள் ஆதலால் மனிதத் தன்மை நிரம்பியவர்களாக இருந்தார்கள். மறுபு றத்தில் பெறுமதியற்ற விடயங்களுக்காகத் தமது மனச் சாட்சியை விற்பனை செய்த போலிக் கிறிஸ்தவர்கள் போலல்லாது, பிலிப் குடும்பத்தினர் எப்போதும் உண் மைக் கிறிஸ்தவர்களாயிருந்தார்கள்.

(மிகுதி அடுத்த வாரம்)

# அதிரடி காட்டுமா ஐ.நா. சங்கம்...?



அமெரிக்காவே ஆடிப்போயிருக்கிறது என்று கடந்த வாரம் சொல்லி வாய் மூடியிருக்க வில்லை... அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ட்ரம்ப் அப்போதே கைது செய்யப்பட்டுவிட்டார். கையோடு பிணையில் விடுவிக்கப்பட்டும் விட்டார். அச்சாப் பிள்ளைபோல நீதிமன்றத்துக்கு வந்திருந்த அவர் மௌன மாக நின்று நீதிபதியின் அறிக்கையைச் செவிமடுத்துத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் பிணை பெற்று அமைதியாகவே அவ்விடம் விட்டகன்றார். குற்றவாளி எனினும் தண்டிக்கப்பட்டாலும்கூட எதிர் வரும் வருடத்தில் அமெரிக்காவில் நடக்கவிருக்கிற அடுத்த அதிபருக்கான தேர்தலில் அவர் களமிறங்கு வதில் எந்தச் சிக்கலும் இல்லைப்போலதான் தெரிகி றது. ஆனால், என்ன வெற்றியீட்டுவதில்தான் அவருக் குச் சிக்கல் இருக்கிறது. அமெரிக்காவின் பிரச்சினை... அதுவும் ட்ரம்பின் பிரச்சினை இப்படியிருக்க மறுதுரு வத்தில் ரஷ்யாவின் பிரச்சினை பூதாகரமாகியிருக்கிறது. புடினைக் கைதுசெய்யுமாறு உத்தரவு பிறப்பித்திருக்கி றதாம் பன்னாட்டு நீதிமன்றம்.

**புடின் மேல் என்ன வழக்கு**


உக்ரைன் மீது போர் தொடுத்ததில் இருந்து அமெ ரிக்கா சார்பாகவும், அமெரிக்காவின் அழுத்தங்கள் சார்பக ஐ.நா மற்றும் ஐரோப்பியத் தரப்புகளாலும் ரஷ்யா மீது பல தடைகள் விதிக்கப்பட்டுவிட்டன. ரஷ்ய அதிபர் புடின் மீது பல வழக்குகள் தொடுக் கப்பட்டுள்ளன. 2022ஆம் ஆண்டு மாசி மாதம் 24ஆம் திகதியன்று உக்ரைன் மீது தாக்குதலை ரஷ்யா ஆரம்பித்தது. ஒரு வருடத்தைக் கடந்திருந்த நிலை யில் உக்ரைன் சிதைந்து சின்னாபின்னமாகி விட்டது. குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், சிப்பாய்கள், இளைஞர்கள் என உயிரிழப்புகள் ஏராளம். இதைவிடச்

# ஐ.நாவிடமிருந்து அதிரடியான செயற்பாடுகளை எதிர்பார்ப்பது ஏமாற்றத்தையே தரும்.

சொத்திழப்புகள், பொருளாதாரப் பாதிப்பு என உக்ரைன் சந்தித்துவிட்ட இழப்புகள் ஏராளம். உக்ரைன் - ரஷ்யா போரால் உக்ரைன் இறக்குமதிகளில் தங்கியிருந்த உலக நாடுகள் பலவும்கூடப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பன்னாட்டுச் சங்கம், நடுவர் மன்றம், நீதிமன்றம், கூட்டு என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்ற ஐ.நா. இந்தப் போர் விடயத்தில் தீர்க்கமான நடவடிக்கைகள் எதையாவது நிகழ்த்தி வெற்றியீட்டியிருக்கிறதா என்றால் அதுதான் இல்லை.... அவ்வப்போது அறிக்கைகள் விட்டதோடும் மிரட்டல்கள் விட்டதோடும் சரி. தனக்கு மிக அருகில் இத்தனை இழப்புகளும், அவலங்களும் அளவு கணக்கின்றி நடந்துகொண்டிருக்கும்போது அதைத் தடுத்து நிறுத்துவதற்குத் திராணியில்லாதிருக்கிறது அந்தச் சங்கம்....! இந்த நிலையில்தான் உக்ரைனிலிருந்து குழந்தைகள் நாடுகடத்தப்பட்டதான ஒரு வழக்கில் இப்போது புடினுக்குப் பிடியாணை பிறப்பித்திருக்கிறது பன்னாட்டு நீதிமன்றம். இது செயற்பாட்டுத்திறன் பெறுமா...? அல்லது அறிக்கையாக எங்காவது மூலைக்குள் அடைந்து கிடக்குமா என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

**ஐ.நாவால் இயலுமா...?**


பன்னாடுகளின் எந்தவொரு பிணக்கிலும் இதுவரை காலமும் ஐ.நா. அதிரடி காட்டியதாகப் பதிவுகள் இல்லை. இலங்கைப் போர்க்குற்ற விவகாரம் உட்படப் பல நாடுகளின் போர்க்குற்ற விவகாரங்களில் மந்த கதியிலேயே அதன் செயற்பாடுகள் நடக்கின்றன - நடந்திருக்கின்றன. இதனால் ஐ.நாவிடமிருந்து அதிரடியான செயற்பாடுகளை எதிர்பார்ப்பது ஏமாற்றத்தையே தரும். தனக்கு மிக அருகில், தனது வலுமிக்க நாடுகள் சூழ்ந்திருக்கும் பகுதியில் நடக்கின்ற மனித அவலங்களை முடிவுக்குக் கொண்டுவரத் திராணியற்றிருக்கும் அந்தச் சங்கத்தின் காலைப் பிடித்துத்தான் இங்கு நடந்த போர்க்குற்ற விடயத்திலும், தீர்வு விடயத்திலும் நம்மவர்கள் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுத்தளத்துடன் தனது நிர்வாக நடவடிக்கைகளை நடத்திவரும் ஐ.நா. உலக நாடுகளில் ஏற்படுகின்ற பிணக்குகளை மேற்படி நாடுகளின் அரசியல் அணுகுமுறையோடே அணுகிவருகிறது. இதனால்தான் தீர்வுகளிலும், சிக்கல் தீர்ப்பதிலும் முடிவுகள் எட்டப்படாமல் இருக்கிறது. இந்த நிலையில் வீட்டோ அதிகாரங்கள் எதிர் எதிர்த் துருவங்களாகப் போட்டியிடும் உக்ரைன் ஆடுகளத்தில் ஐ.நாவின் அதிரடியை எதிர்பார்ப்பது முட்டாள்தனமே. புடினுக்குப் பிறப்பித்துள்ள பிடி உத்தரவுகூட ஒரு வித தில்லு முல்லு அரசியல் விளையாட்டாகவே முடிவுக்கு வரும் என்பதில் ஐயமில்லை.





# இந்த வார சமையல்





## பலாக் கொட்டை - முருங்கைக் காய்க் குழம்பு

முருங்கைக்காய்க் குழம்பின் ருசியை உங்களுக்குச் சொல்லித் தெரியவேண்டிய தில்லை. அத்தகைய முருங்கைக் காயுடன் பலா விதைகளைச் சேர்த்துச் சமைத்தால் எப்படியிருக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா...? முருங்கைக் காயுடன் பலா விதைகளைச் சேர்த்துக் குழம்பாக்கும்போது மிகத் தூக்கலான ருசியைக் கண்டிப்பாக நீங்கள் உணரலாம். ஒரு தாவரத்தின் காயும், மற்றொரு தாவரத்தின் விதையும் இணைந்து தரும் இந்தச் சுவை உங்கள் நாவுக்கு நல்ல விருந்தாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்த இரண்டு இயற்கைக் காய், கறிப் பிணைப்புகளும் தரும் சுவையை இந்தமுறை கறி சமைத்துண்டு அனுபவித்துப் பாருங்கள்.

தேவையான பொருள்கள்

- முருங்கைக் காய் - கால்கிலோ
- பலா விதகைள் - 150கிராம்
- தேங்காய்ப்பால் - 2டம்ளர்
- மிளகாய்த்தூள் - 25 கிராம்
- சின்ன வெங்காயம் - 50கிராம்
- தேங்காய் எண்ணை - 20மில்லி
- பெருஞ்சீரகம் - 2தேக்கரண்டி
- கடுகு - அரைத் தேக்கரண்டி
- செத்தல் மிளகாய்கள் - 3
- மஞ்சள் தூள் - அரைத் தேக்கரண்டி
- கறிவேப்பிலை - 2கெட்டுகள்
- உப்பு - தேவையான அளவு
- தேசிப்புளி - பாதியளவு

**எப்படிச் சமைப்பது...?**

முருங்கைக் காய்களைத் தோல் சீவிச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். பலா விதைகளைத் தோல் உரித்து நீளவாக்கில் இரண்டு, மூன்று கீலங்களாக நறுக்கிக் கொள்ளுங்கள். இவற்றைக் கழுவிச் சுத்தப்படுத்தியபின்னர். கறி சமைப்பதற்குரிய சட்டியை அடுப்பில் வைத்து அதில் தேங்காய் எண்ணையை விட்டு நறுக்கிய வெங்காயம், பெருஞ்சீரகம், கடுகு, நறுக்கிய செத்தல் மிளகாய், கறிவேப்பிலை ஆகியவற்றை இட்டு வதக்கிக் கொள்ளுங்கள். பின்னர் முருங்கைக் காய், மற்றும் பலா விதைகளைப் போட்டுப் பிரட்டிக் கொள்ளுங்கள். எண்ணையில் வதங்கிக் கொள்வதற்கு மெல்லிய நெருப்பில் வைத்துச் சிறிது நேரம் மூடி விடுங்கள். பின்னர் தேங்காய்ப் பால், தூள், மஞ்சள்தூள், உப்பு ஆகியன சேருங்கள். சேர்த்ததும் நன்கு பிரட்டியெடுத்துக் கொள்ளுங்கள். நெருப்பைச் சற்று அதிகப்படுத்திக் கொதிக்க விடுங்கள். கறி கொதித்துத் தூளின் பச்சை வாசனை இல்லாமல் இறக்கிக் கொள்ளுங்கள். இறுதியாகத் தேசிப் புளியை விட்டுச் சுவை பாருங்கள்.




தர்மராசா

# சிறைக்குள்...

## ஆயுளைக் கூட்டும் அப்பத் தண்ணி

மரினோ என்றொரு கைதியைக் களுத்துறைச் சிறையிலிருந்து அனுராதபுரச் சிறைக்குக் கொண்டு வந்தார்கள். அவனைத் தனித்துக் களுத்துறையிலிருந்து அனுராதபுரத்துக்குக் கொண்டுவந்ததால் என்ன வாகனத்தில் வந்தாய் என்று அனுராதபுரச் சிறையிலிருந்த கைதிகள் அவனிடம் கேட்டார்கள். அதற்கு அவன் மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்தார்கள் என்றான். அப்படி என்றால் கைவிலங்கு எப்படிப் போட்டார்கள் என்று கைதிகள் கேட்க, மரினோ சொன்னான், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரின் வயிற்றைக் கட்டிப் பிடிக்கச் சொல்லி அவனது வயிற்றுப் பக்கமாக தனது கைகளை வத்து விலங்கிட்டார்கள் என்று. வந்திறங்கும் வரை அவனைக் கட்டிப்பிடித்தபடியே இருந்ததால் கைமுட்டுகள் நோவாக இருக்கின்றன என்றும் சொன்னான். இதைப் பலர் உண்மை என்று நம்பியும் விட்டார்கள்.

அனுராதபுரச் சிறையில் மன்னாரைச்சேர்ந்த சசி என்றொரு கைதி இருந்தார். கட்டையான, உருண்டையான தோற்றமுடையவர். எந்நேரமும் சுறு சுறுப்பாக இருப்பார். ஏனையவர்களுக்கு உதவியும் செய்வார். கல கலப்பான பேர்வழி, காலையில் கடுமையான உடற்பயிற்சி செய்வார். வயிறு வற்ற வேண்டும் என்பதற்காகத் துவாய் ஒன்றால் வயிற்றை இறுக்கிக் கட்டிக் கொண்டு உடற்பயிற்சிகளைச் செய்வார். பயிற்சிகள் முடிந்தபின் அலுமினியப் பாத்திரத்தில் தேநீரையும் சீனியையும் கரைத்து பாத்திரம் ஒன்றுக்குள் விட்டு ஜப்பானில் இருந்து பாதிரியார் ஒருவர் கொண்டுவந்து கொடுத்த அப்பம் ஒன்றை அதற்குள் வைத்து வளர்ந்தார். அது கணவாய்போல வழு வழுப்பாக இருந்தது. ஒரு வகைக் காளான் என்றுகூடக் கூறலாம். அதில் ஊறியிருக்கும் தண்ணீரைத் தினமும் வடித்துக் குடிப்பார். அவரது இந்தப் பணிக்கு ரேகன் என்ற இன்னோர் மன்னார் நண்பர் உதவியாளராக இருப்பார். இந்த அப்பம் ஆயுளைக் கூட்டுகின்ற நோய்களை இல்லாது செய்கிற ஒளடதம் என்று சசி கூறுவார். அதனால் அதற்கு நான் ஆயுள் தண்ணி என்று பெயர் வைத்தேன். ஒரு நாள் எனக்கும் அதில்; கொஞ்சம் குடிக்கத் தந்தார். அதன் சுவையும் மணமும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆயுள் குறைந்தால் பரவாயில்லை இது எனக்கு வேண்டாம் என்று அவனிடம் சொன்னேன்.



# அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றித் துணிகரச் செயல்



தயாள் விஜயரத்ன கொழும்பு - ராஜகிரியவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1989 ஆம் ஆண்டு இலங்கை வான் படையில் சேர்ந்தார். அனுராதபுரம், கட்டுநாயக்கா ஆகிய வான் படைப் பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்றுச் சரக்கு வானூர்திகள், போர் உலங்கு வானூர்திகள், சிறப்பு அதிதிகளுக்கான உலங்கு வானூர்திகள் ஆகியவற்றைச் செலுத்தும் பணியில் ஈடுபட்டார். வித்தியாசமான, திகில் நிறைந்த தனது பணி அனுபவங்களை வனச யூரியூப் தளத்தில் பகிர்ந்துள்ளார். தனது சேவைக் காலத்தில் நடந்த பல முக்கிய சம்பவங்களை இதில் குறிப்பிட்டிருக்கிறார்.

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

1991இல் வான் படைப் பயிற்சியை முடித்தபின் 1991 ஜூன் 16இல் "வன்னி விக்கிரம" போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். சி.எச்-536 சரக்கு வானூர்தியைக் கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு எடுத்துச் சென்றேன். பின்னர் அங்கிருந்து வெறொரு வானோடி அதைப் பலாலி நோக்கி எடுத்துச் சென்றார். அந்த வானூர்தி திடீரெனக் காணாமல் போனது. அதைத் தேடுவதற்காக நான் உலங்கு வானூர்தி ஒன்றில் ஆயிரத்து 500அடி வரை பதிந்து பறந்து தேடினேன். அப்போது அந்த வானூர்தி எரிந்துகொண்டிருப்பதைக் கண்டேன். வானோடிகள் இருவரும் உயிர்தப்பியிருந்தார்கள். அவர்கள்

சசி வளர்த்த அந்த அப்பம் ஓர் உயிரினம். சீனித் தண்ணீரில் வளரக்கூடியது. அதற்கான விஞ்ஞானப் பெயர் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அது ஒரு நுண்ணங்கி என்று நினைக்கிறேன். வெள்ளையும் மண்ணிறமும் கலந்த நிறத்தில் அச்சு அசலாக அப்பத்தைப்போல வட்ட வடிவில் காட்சியளித்தது. வழு வழுப்பாகவும் நொழு நொழுப்பாகவும் இருந்தது. ஆனால் அதிலிருந்து துர்நாற்றம் வீசவதில்லை.

அநுராதபுரச் சிறையில் இன்னோர் வித்தியாசமான விடயம் இருந்தது. அது பலர் ரசித்த ஒரு விடயமும்கூட. மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு நபர்கள் ஒரே வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்படடிருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் இடையில் மந்திரப் போட்டி நிலவியது. அவனை மந்திரத்திHல் விரைவில் கொல்லப்போகிறேன் என்று அதில் ஒருவர் கூற மற்றவர் அதையும் நான் பார்த்துக்கொள்கிறேன் என்பார். மந்திரங்கள் எழுதிய கொப்பிகளை களவெடுப்பது என்று பல விடயங்களை இருவரும் மாறி மாறிச் செய்வார்கள். அவர்களில் ஒருவர் விடுதலை ஆகும்வரை இந்தப்போட்டி அவர்களுக்குள் இருந்தது. ஏனைய கைதிகளைப் பொறுத்தவரை இவர்களது புதினங்கள் நல்ல பொழுது போக்காக இருந்தன.

அவர்களின் பலவீனம் அறிந்து இருவரையும் யாராவது சீண்டிக்கொண்டிருப்பார்கள். என்ன அவன் அப்பிடிச் சொல்லுறான் நீ ஒன்றும் செய்யவில்லையோ என்று கொழுவி வைப்பார்கள். அப்படிச் சொல்லும்போது வேறு யாருக்கோ பேசுவதுபோல பெயர் சொல்லாமல் சங்ககால இலக்கியப் பாணியில் அவர்கள் கதைப்பது இரசனைக்குரியதாக இருக்கும்.


அனுராதபுரச் சிறையில் இருந்த இன்னோர் விடயம் இரவு நேரத்தில் மின்சாரம் தடைப்படும்போது குறிப்பிட்ட சில கைதிகளை இலக்கு வைத்துத் தண்ணீர்ப்பேத்தால்கள், பாண் துண்டுகள், கையில் அகப்படுகின்ற பொருள்களால் எறிந்து தாக்குவது. ஒவ்வொரு சங்கத்துக்கும் தனியான இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதால் அவ்விடங்களில் இருந்து கதைத்துக்கொண்டிருப்பார்கள். அப்போதே இந்தத் தாக்குதல்கள் நடக்கும். இது ஒரு வகையில் பழிதீர்க்கும் நடவடிக்கையாகவும், முஸ்பாத்தியாவும் இருக்கும். எறிந்த பின்னர் எறி வாங்கியவர் எறிந்தவரின் பெயரை எடுகோளாக வைத்துக் கொண்டு அல்லது பொருத்தமானவர்கள், அளவானவர்கள் தொப்பியைப் போட்டுக்கொள்ளுங்கள் என்பதுபோல அவர்களது பூர்வீகத்தை இழுத்துத் தூசணங் களால் பேசுவார். இதுவும் மிகவும் இரசனைக் குரிய விடயமாக இருக்கும்.

(தொடரும்)

இருவரையும் ஏற்றினேன். அந்த வானூர்தி எரிந்த இடத்தை மறுநாள் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். அந்த வானோர்தியின் எச்சங்களை மீட்பதற்காக நான் உலங்கு வானூர்தியில் சென்று ஆயிரத்து **500**அடிக்கு அதைப் பதித்தபோது புலிகள் கடுமையாகத் தாக்கினார்கள். அதனால் தரையிறங்க முடியவில்லை. எனது உலங்கு வானூர்தியில் எரிபொருள் கலனில் வெடிபட்டதால் அதை வவுனியாவில் பத்திரமாகத் தரையிறக்கினேன்.

**ஆனையிறவுத் தாக்குதல்**

**1991** ஜூலை **11**ஆம் திகதி ஆனையிறவுப் படை முகாம் மீது புலிகள் கடுமையான தாக்குதலைத் தொடுத்தனர். அங்கு காயப்பட்டிருந்த படையினரைக் காப்பாற்ற




முயன்றபோது புலிகள் தாக்கியதில் உலங்கு வானூர்தியின் "றொட்டர்" பகுதி சேதமடைந்தது. பலாலியில் அதை இறக்க **30** நிமிடங்கள் எடுத்தது. எனினும் வழமையான நூறு நொட்ஸ் வேகத்தில் பறக்க முடியாததால் அதை **55**வரை குறைத்து மெதுவாகப் பறந்தேன். பலாலியில் இறங்கியபோது றொட்டர் இரண்டாக வெடிப்பதற்கு **2**அங்குலம் வரையான பகுதியே மீதமிருந்தது.

**டென்சில் ஹொப்பே கடுவ சாவு**

**1992** ஆகஸ்ட் **7**ஆம் திகதியன்று நானும் கிரோன் சில்வாப் பிள்ளையும் எமது உலங்கு வானூர்திகளைக் காங்கேசன்துறை மைதானத்தில் இறக்கினோம். டென்சில் ஹொப்பே கடுவ தலைமையில் யாழ்ப்பாண நகரை மீண்டும் கைப்பற்றும் படை நடவடிக்கையை முன்னெடுக்கவிருந்தார்கள். ஹொப்பே கடுவவையும், அவர் தலைமையிலான சில உயரதிகாரிகளையும் காங்கேசன்துறையிலிருந்து உலங்குவானூர்தியில் ஏற்றிக் காரைநகர் கடற்படைத் தளத்தில் இறக்கினோம். இறங்கும்போது, "நாளை காலையில் எங்களை அராலியில் வந்து ஏற்றுங்கள்" என்று ஹொப்பே கடுவ கூறிச் சென்றார். ஆகஸ்ட் **8**ஆம் நாள் காலை **9**மணிக்கு எமது உலங்கு வானூர்திகளை வேலணையில் இறக்கி வைப்பதற்காக இயந்திரத்தின் வேகத்தைக் குறைத்தபோது பாரிய வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. நாங்கள் உலங்கு வானூர்தியை இயங்கு நிலையில் வைத்திருந்தபோது அராலியில் ஹொப்பே கடுவ சென்ற வாகனம் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிவிட்டது என்றும் உடனடியாக அங்கு செல்லுமாறும் அறிவிப்புக் கிடைத்தது.

நாம் உடனடியாகச் சென்று அந்த இடத்தில் உலங்கு வானூர்தியை இறக்கியபோது உதவிக்கு யாரும் இருக்கவில்லை. நாங்கள் ஹொப்பே கடுவவையும் ஏனைய **5**பேரையும் உலங்கு வானூர்தியில் அவசரமாக ஏற்றினோம். அப்போது ஹொப்பே கடுவவுக்குக் காயம் எதுவும் இருக்கவில்லை. உயிர் ஊசலாடிய நிலையில் இருந்தார். பலாலியில் இறக்கி முதலுதவி செய்தபின் வானூர்தி மூலம் அவரைக் கொழும்புக்கு அனுப்பினார்கள். உட்காயம் காரணமாக அவர் இறந்துவிட்டார் என்று பின்னர் அறிந்தேன்.

**கிளிநொச்சித் தாக்குதல்**

**1997** ஜனவரி **5**ஆம் திகதி கிளிநொச்சிப் படை முகாம் மீது புலிகள் தாக்கியதில் **200**க்கு மேற்பட்ட படையினர் காயப்பட்டிருக்கின்றனர் என்று அறிந்தேன். எம்.ஐ.**24** ரக உலங்கு வானூர்திகள் இரண்டில் காயப்பட்டவர்களை ஏற்றுவதற்காக ஆனையிறவுப் பகுதியில் நன்கு தாழ்வாகப் பறந்தபோது புலிகள் கடுமையாகத் தாக்கினார்கள். எனினும் அவற்றை எதிர்கொண்டு கரடிப்போக்கில் தரையிறங்கியபோது **200**க்கு மேற்பட்ட சிப்பாய்கள் கை, கால்கள் இல்லாமலும் அதிகம் காயப்பட்டும் கிடந்தார்கள்.

எம்.ஐ.**24** உலங்கு வானூர்தியில் **35**பேருக்கு மேல் ஏற்ற முடியாது. அது கடைசிச் சந்தர்ப்பம் என்பதால் அந்த வரையறைகள் எவையும் பின்பற்றப்படவில்லை. காயப்பட்டவர்களை ஏற்றிக்கொண்டிருந்தபோது ஆனையிறவில் கடுமையாகத் தாக்குதல் நடந்து கொண்டேயிருந்தது. எனது வானூர்தியில் மட்டும் ஒரே தடவையில் **76**பேரை ஏற்றினோம். அவர்களை நேரடியாகப் பலாலிக்குக் கொண்டுபோனால் ஏனையவர்களைக் கரடிப்போக்கிலிருந்து மீட்க முடியாது என்பதால் முதலில் ஏற்றியவர்களை ஆனையிறவுக்கு வடக்காகப் பாதுகாப்பான ஓரிடத்தில் இறக்கிவிட்டு மீண்டும் கரடிப்போக்குப் பகுதிக்குச் சென்று எஞ்சியிருந்தவர்களையும் ஏற்றிக்கொண்டு அவர்களை நேரடியாகப் பலாலியில் கொண்டு சென்று இறக்கிவிட்டு எரிபொருள் நிரப்பிக் கொண்டு ஆனையிறவுக்கு வடக்காக இறக்கியவர்களைத் தேடிச் சென்றபோது இருட்டிவிட்டது. அங்கு காயப்பட்டுக் கிடந்தவர்களும் எமக்குச் சமிக்ஞை காட்டக்கூடிய நிலையில் இல்லை. பின்னர் வெளிச்சம் போட்டுத் தேடி அவர்கள் இருந்த இடத்தைக் கண்டுபிடித்தோம். அவர்களையும் ஏற்றிப் பலாலியில் இறக்கியபின்னர்தான் அறிய முடிந்தது இரண்டு உலங்கு வானூர்திகளிலும் ஏற்றப்பட்ட சிப்பாய்களின் தொகை **225** என்று. அந்தத் துணிகரமான முயற்சியை அன்று எடுத்திருக்காவிட்டால் அந்த **225** சிப்பாய்களும் சாவடைந்திருப்பார்கள்.



# “பர்ஹா”

## கவனம் ஈர்க்கும் பெண்ணியக் கதை




2021 ஆம் ஆண்டு வெளியாகிய பாலஸ்தீனத் திரைப்படம் பர்ஹா. தமது தாய் நிலத்திலிருந்து பாலஸ்தீனர்கள் 1948 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆக்கிரமிப்பால் இடம் பெயர்ந்தபோது பாதிக்கப்பட்ட பல அனுபவங்களைக் காட்டுகிறது. இந்தப் படத்தை டேரின் ஜெ சலாம் இயக்கியுள்ளார்.

2022 ஆசியா பசிபிக் திரை விருதுகளில் சிறந்த இளைஞர் திரைப்படம் பிரிவில் வெற்றி பெற்ற இந்தப் படம் 95வது ஒஸ்கார் விருதுக்காக சிறந்த சர்வதேசத் திரைப்படப் பிரிவில் ஜோர்தான் நாட்டின் சார்பாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**கதை**

பாலஸ்தீனத்தில் ஒரு கிராமம். அங்குள்ள இஸ்லாமியக் குடும்பத்தில் ஃபர்ஹாவும் ஒருத்தி. பெண்கள் திருமணத்துக்காக வளர்க்கப்படுபவர்கள், திருமணத்தை மட்டுமே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டிருக்கவேண்டும் என்றுரைக்கும் சமூகமே அவளைச் சுற்றியுள்ளது. ஆனால் பர்ஹாவோ வாசிப்பிலும் கற்றலிலும் கவனம் செலுத்துகிறாள். அந்தக் கிராமத்தின் மேயராக இருக்கின்ற அவளது தந்தை அவளுக்கு ஆதரவளிக்கிறார். அது அவளுக்குத் தென்பூட்டுகிறது.

15 வயதைக் கடந்தால்போதும் பெண்களுக்கு உடனடியாகத் திருமணம் நிகழ்த்திவிடவேண்டும் என்கிற எழுதப்படாத சட்டம் பர்ஹாவை நோக்கிப் பாய்கிறது.

அதை எதிர்த்துத் தான் படிக்க வேண்டியவை நிறைய இருக்கின் றன என்கிறாள் பர்ஹா. இதனால் அவளைநோக்கிப் பல எதிர்ப்புகள் கிளம்புகின்றன. அந்த எதிர்ப்பு களை மீறித் தனது கிராமத்திலிருந்து வெளியேறி நகருக்குச் சென்று தனது படிப்பை தொடர்வதென்று அவள் முடிவெடுக்கிறாள். தந்தை யும் அதற்குச் சம்மதம் தெரிவிக் கிறார். மகிழ்ச்சி மழையில் நனைகி றாள் பர்ஹா. அந்த மகிழ்ச்சி ஒரு நாள்கூட நீடிக்கவில்லை. அவளது சிறகை உடைக்கும் காட்சிகள் அடுத்தடுத்து அரங்கேறுகின்றன. பார்க்கும் நமது மனதை பதை பதைக்க வைக்கின்றன. மதக் கட்டுப்பாடு என்பதை வெல்லும் அவளைப் பாலஸ்தீனத்தைச் சூழ்ந்த போர் என்கிற அரக்கன் எவ்வாறு அழிக்கிறான் என்பதே 90 நிமிடம் கொண்ட இந்தச் சிறு படத்தின் மீதிக்கதை. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என் கிற பழமொழிக்கு அச்சொட்டாகப் பொருந்திப்போகும் வித்தில் எடுக் கப்பட்டுப் பல வெற்றி மகுடங்க ளைச் சூடியிருக்கிறது படம்.


**உண்மைக் கதை**

1948ஆம் ஆண்டில் பாலஸ்தீ னத்தைப் பிரித்தானியர்கள் ஆக் கிரமித்தார்கள். அந்தக் காலகட் டத்தில் அங்கு பிரித்தானியப் படைகள் பாலஸ்தீனத்தில் நிகழ்த் திய கொடூரங்களையும் அங்கு நிகழ்ந்த போரால் ஏற்பட்ட அவ லங்களையும் மையப்படுத்தியே இந்தப் படத்தின் கதை பின்னப் பட்டிருக்கிறது. இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார் டெரின் ஜெ சலாம். இசை, ஒளிப்பதிவு என அனைத்தும் படத்துடன் பொருந் திப் போய்க் கதைக்கு வலுச்சேர்க் கின்றன.

ஆண்டாண்டு காலமாகத் தொடரும் இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரினால் அப்பாவிப் பொதுமக் கள் மீது நடத்தப்படும் வன்முறை யையும், பர்ஹா போன்ற இளம் பெண்களின் கனவுகள் அழிக்கப் படுவதையும் அனைவருக்கும் வெளிப்படுத்தும் முயற்சியாகவே இந்தத் திரைப்படம் நமக்குக் கதை சொல்கிறது. இந்தப் படத் துக்கு பன்னாட்டு விருதுகள் பல கிடைத்திருக்கின்றன.



# எவடம் எவடம் புளியடி புளியடியோ?



**கதிரேசன் காத்தவராயன்**

குனநாளாய் சுப்பிரமணியம் மாஸ்ரர் விட்டுப் பக்கம் போகேல்லையெண்ட நினைப்புவர வெளிக் கிட்டுப் போனன். அங்கை லிங்கத்தார் மாஸ்ர ரோடை கதைச்சுக்கொண்டிருந்தார். என்னைக் கண்டிட்டு உற்சாகமாய் 'வாரும்...வாரும் எங் கையப்பா கண்டு கனகாலமாப் போச்சுது...இரும்' எண்டு வரவேற்றார் மாஸ்ரர்.

'எப்பிடி மாஸ்ரர் சுகங்கள்? என்ன மாஸ்ரர் கனடாக் காத்து இஞ்சாலை திரும்பியிருக்குப் போலை?' எண்டு கேட்டதுக்கு 'மாஸ்ரர் சிரிச்சார். லிங்கத்தார் ரண்டு பேரையும் பாத்து முழுசினார். 'என்னப்பா லிங்கம் இவரைத் தெரியேல்லையோ? எங்கடை...' எண்டு அறிமுகப்படுத்தத் தொடங் கவே இடைமறிசு;ச லிங்கத்தார் 'இவர்...இவர்... அட எங்கடை கதிரேசண்ணையில்லோ?....அடை யாளமே மாறிப் போனியள்?' எண்டு எழும்பி வந்து கையளைப் பிடிச்சார்.

சுகநய கதையளோடை இருக்க சுதன் ஒரு கூட்டாளிப் பெடியனோடை வந்து இருந்துகொண் டான். லிங்கத்தார்தான் தொடங்கினார் 'என்னடா தம்பி சுதன்...ஆள் நல்லாய் வளந்திட்டாய்? அப்ப வலு சின்னனிலை கண்டது...அப்பா எல்லாம் சொன்னவர்' எண்டு. 'கன காலத்துக்குப் பிறகு வாறி யள்... நிறைய மாற்றங்கள்.. என்ன?' எண்டான் சுதன். 'எனக்கெண்டால் றோட்டுகளும் கட்டிடங் களும்தான் மாறியிருக்கிறமாதிரித்தான் கிடக் குது... அப்பிடித்தானே?' எண்டார் லிங்கத்தார்.

குதை அப்பிடிப் பல விசயங்கIளுக்குள்ளாலை போய் விலைவாசியிலை வந்து டக்கெண்டு நிண் டுது. 'காசுக்குப் பெறுமதி டொலரிலை மட்டுமே... பாக்கவே தெரியுதுதானே?' எண்டார் லிங்கத்தார். :ஓமோம்... சரியாத்தான் சொன்னீர் லிங்கம்... ஆனாலொண்டு உங்களுக்குப் பிரச்சனையில்லை யல்லே? டொலரை மாத்திறதிலை லாபமல்லே?' எண்டார் மாஸ்ரர். 'அப்பிடித்தான் என்ரை அக் காவும் பேசினவ...நீங்கள் டொலரை மாத்தி கேக் கிற விலையைக் கவலையில்லாமல் குடுத்து எங் களைச் சாமானுகளை வாங்கேலாதஆக்களாய் மாத்திறமாம்' எண்டார் ஒரு குற்ற உணர்ச்சியோடை லிங்கத்தார்.

'அப்பிடியும் பாக்கலாம்... அப்பிடி வாற காசி லைதானே இஞ்ச ஆடம்பரமாய் செலவு செய்யி றம் எண்டிறதையும் பாக்கத்தான் வேணும். கொண் டாட்டங்கள் அது இதுவெண்டு காசு தண்ணியா யல்லே செலவாகுது?' எண்டார் மாஸ்ரர். 'இந்த விசயம் அரசாங்கம் எப்பவோ கண்டு பிடிச்ச மாதி ரியல்லே கிடக்குது... விலையளைக் கண்டபடி கூட் டிறதைப் பாக்கேக்கை அப்பிடித்தான் கிடக்குது'

05

# மீட்டல்...



துன்பானந்த சுவாமி

இன்று பொங்கல் பொதி போன்று கொழுக்கட்டைப் பொதி வாங்கி தயாரிக்கும் நிலைக்கு வந்திருக்கிறோம். பொதி உணவு என்றால் பதப்படுத்தல் இரசாயனச் சேர்க்கையின்றி இருப்பது சாத்தியமற்றதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அப்பமா, தோசைமா, இட்லிமா, இடியப்பமா, ஒடியல்மா என்று மா வகைகள் எல்லாமே பொதியாக கிடைக்கிறது. இதில் ஒரு முழு இரவை புளித்தல் என்கிற வேதியியல் மாற்றத்துக்கு உள்ளாகின்றவை பொதியாகக் கிடைப்பதில் ஒருசில நிமிடங்களில் உணவாக மாறக்கூடியவாறு உள்ளதென்பது செயற்கை இரசாயனச் சித்துவிளையாட்டே.

இந்த பொதி என்கிறபோது (பைக்கேஜ்) முழு உணவுக்குமானதாக வந்திருக்கிறது. முன்னர் இருந்த கூடிச் சமைத்து உண்கிற பழக்கம் போய்விட்டது. மேசையில் சுவைப்பதை தட்டு நிறைய அள்ளிப் போட்டுக்கொண்டு ஓடுகிற பழக்கமே இன்று உள்ளது. உணவு வினியோக நிறுவனங்கள் பல்கிப் பெருகிவிட்டன. அவற்றுக்கு ஒரு தொலைபேசி அழைப்புப் போதுமானது. சொல்லிய உணவு முன்பதிவு செய்துகொண்ட அளவில் வீட்டுக்கே வந்து சேர்கிறது. அவர்களே மேசைகளையும் ஏற்பாடு செய்திருப்பார்கள் விருந்தென்று அழைக்கப்பட்டவர்கள் இடிபட்டு நெருக்குப்பட்டு தாமாகவே பரிமாறி உண்டு வரவேண்டியதாக இன்றைய விருந்துபசாரம் மாறிவிட்டிருக்கிறது.

முன்னைய காலத்தில் விருந்துச் சமையலுக்கான பொருட்கள் அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பட்டியல் தயாரிப்பதே ஒரு சடங்குதான். அனுபவசாலிகளே அதைச் செய்வர். பின்னர் மளிகைப் பொருட்

எண்டான் சுதனோடை வந்திருந்த பெடியன்.

'தம்பி சொல்லுறது சரிதான்... எனக்கும் அப்பிடித்தான் படுகுது... ஏனெண்டால் விலையளை கூட்டுறது அப்பிடியல்லே நடக்குது...' எண்டு மாஸ்ரர் சொல்லிக்கொண்டிருக்க 'இப்ப நல்லாக் குறைக்கிறாங்களல்லே?' எண்டார் லிங்கத்தார். 'அதுவும் உண்மைதான். வெளியாலை நிண்டு பாத்தால் அப்பிடித்தான் தெரியும்...உமக்கும் அப்பிடித்தான் தெரியுது' எண்டார் மாஸ்ரர்.

'அது அங்கிள் சேர் சொல்லுற மாதிரித்தான் நடக்குது... பழைய விலையைவிடக் பல மடங்கு கூடின நிலையிலைதான் இப்பகுறைக்கிறதாச் சொல்லுறவிலை இருக்குது... ஏமாத்துவேலைதான் இதெல்லாம்' எண்டான் சுதனோடை வந்திருந்த பெடியன். 'இப்ப பாருங்கோவன்... உற்பத்திக்கு அவசியமான எரிபொருளுகளின்ரை விலையிலை பெரியமாற்றமில்லை...அதுதான் டீசல் மண்ணெண்ணெய் அதுகள்... ஆனால் பெற்றோல் விலையை குறைச்சிருக்கிறாங்கள்...அது செலவுக்குரிய பொருள்தானே?' எண்டான் சுதன்.

'அதிலையும் லிங்கம் மறைவான ஒரு சுறண்டல் இருக்குதுகண்டீரே? முந்தியிருந்த விலைக்கு ரண்டுமடங்கிலைதான் இப்பத்தியான் விலை இருக்குது...முதல் நாலு லீற்றர் கிழமைக்கு எண்டதிலை ஆயிரத்தநுநூறு ரூபாய்... இப்ப பாரும் முண்ணூற்றிநாப்பது... ஏழாலை பெருக்கும்... எங்கடையாக்களுக்கும் வலு புழுகம் ஏழு லீற்றறையும் அடிக்கிறதிலை ஓடித் திரியிறதிலை...'எண்டு மாஸ்ரர் நிப்பாட்டினார்.

'கூடின விலையிலை அடிச்சதை விட இப்ப எழுநூற்றெண்ப ரூபாய் கூடவல்லே இழக்கிறமெண்டதை யோசிக்கிற அளவிலை நாங்கள் இல்லை' எண்டான் சுதன். லிங்கத்தார் தலையை ஆட்டினார் குழப்பத்தோடை. 'இதுதான் லிங்கம்... இது ஒரு மாற்றமாத் தெரியேல்லையோ? இப்பிடித்தான் ஊசி போற இடத்தைப் பாத்து உலக்கை போற இடத்தைப் பாக்கிறதை விட்டிடுறம்...இல்லையோமாஸ்ரர்?' எண்டுகொண்டு எழும்பி வீட்டை வந்திட்டன்.

கள் கொள்வனவு செய்யப்பட்டு முன்தயாரிப்பு வேலைகள் உறவுகளது பங்கேற்புடன் இடம்பெறும். மிளகாய்த்தூள் மற்றும் இதர கறிகளுக்கான சரக்குகள் தயாரிப்பதே அப்பணியாகும். பெண்கள் கூடியிருந்து இப்பணிகளைச் செய்கிற அதேவேளை ஆண்கள்கூடி பந்தல் அமைத்தல் தூய்மைப்படுத்தல் பணிகளை ஆற்றுவர். அவர்கள் அனைவருக்கும் சமையல் சாப்பாடு கூட்டாகவே இடம்பெறும்.

குறித்த கொண்டாட்டத்துக்கு சில தினங்களுக்கு முன்னதாக பலகாரச் சூடு அதுவும் கூட்டுத்தான். முதல் நாளில் மரக்கறிகள் வாங்குவது அவற்றை வெட்டிச் சுத்தப்படுத்துவது என்றும் அன்றையதினம் காலையில் சமையல் என்று யாவுமே கூட்டாகவே உறவுகள்கூடி செய்வதிலிருந்த ஆரோக்கியம் மற்றும் சிக்கனம் எல்லாமே போய் மறந்தகதையாகிவிட்டன. எல்லாமே காசு என்கிற கதையாகி உறவுகள் தூரவாகி ஆரோக்கியமற்ற செலவுகள் நிறைந்த கொண்டாட்டங்களாகி விட்ட ஒரு காலத்தில் வந்துநிற்கிறோம்.

கூடிப் பணிசெய்த அந்தநாட்களில் குடும்பவிவகாரங்கள் சுகதுக்கம் குடும்பப்பொருளாதாரம் என்று ஏராளமான விடயங்கள் பரிமாறப்பட்டன என்கிற ஒருவித சமூக ஆரோக்கியத்தைத் தொலைத்துவிட்டோம். அதைவிட விருந்தென்று அழைத்து கையில் நீர்நிறைந்த செம்பு கொடுத்து பந்திக்கழைத்து இருத்தி வாழையிலையில் சுடச்சுட உணவு பரிமாறியபோது வாழையிலை வெந்து கிளம்புகிற வாசனை உணவுகளினது வாசனையோடு சேர்ந்து பசியைத் துண்டிய காலமொன்றை கற்பனையென்று நிராகரிக்கக்கூடிய ஒரு தலைமுறையைக் கொண்டிருக்கிறோம் என்பது துன்பான உண்மை.

இன்றைய விருந்துப் பரிமாறல் பற்றி அதிகமாச் சொல்லத்தேவையில்லை. அதிலும் குறிப்பாக இந்த சுயபரிமாறல் பற்றிப்பேச நியைவே உண்டு. அளவு பொருந்தாத தட்டுக்கள், போத்தலில் தண்ணீர், பிளாஸ்ரிக் கப்பில் பாயாசம் என்று ஒருபுறமாக இருக்க உணவு விரயமென்பதுயாராலும் கண்டுகொள்ளப்படாத இன்னொருபுறமான விடயமும் உண்டு. ஆசை மற்றும்அறியாமையோடு தட்டு நிறைய இருக்கிற உணவுப் பண்டங்களையெல்லாம் அள்ளிக்குவித்துவிட்டு அவ்வளவையும் உண்ண முடியாது கொட்டுவது பெருத்த அனியாயமான செயலென்பதை அறியாது செய்துகொண்டிருக்கிறோம்.

இலையில் பரிமாறும்போது அளவாக கேட்டுக்கேட்டுப் பரிமாறுவதால் விரயமாவது மிகக்குறைவு. சிக்கனம் என்கிற பெயரில் சுயபரிமாற்றத்தின் நோக்கம் உணரப்படாமல் (அதாவது தேவையானதை தேவையான அளவில் எடுத்துண்பது) அதிக விரயம் செய்யப்படுகிறது. ஆக எமது பணம் வீணாக்கப்படுகிறது என்பதை உணரமுடியாதவர்களாக நாகரீகம் வேலையிலகு என்கிறவிதமாக புரிந்து வைத்திருக்கிறோம்.

ஆத்தோடு முன்னைகாலத்தில் உணவுக்கான பொருட்களாக அதிக மதிகமாக உள்ளூர் பண்டங்களே இருந்தன என்பதை கூடிய கவனத்துடன் கருத்திலெடுக்க வேண்டியுள்ளது. இப்போது நாகரீக உணவுப்பொருட்களாக மரபணு மாற்றப்பட்ட அன்னிய மரக்கறிகள் மற்றும் பிறவகையான இரசாயனச் சேர்க்கைகளாலான பொருட்களே நுகரப்படுகின்றன. ஏன் இப்படியான உணவு முறைமைக்குள் சிக்கியிருக்கிறோம்? என்றெப்போதாவது எண்ணியிருக்கிறோமா? எண்ணுவதற்கும் பேசுவதற்கும் நிறையவே உள்ளன.

# இந்த வாரச் சொல்

## ஒல்லன்னி

யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் ஒல்லன்னி என்கிற இந்தச் சொல் பெயர்ச் சொல்லாகப் பயன்படுத்தப் படுகிறது. யாழ்ப்பாணத்தில் புழக்கத்தில் இருந்தாலும் அந்த யாழ்ப்பாணத்தவர்களில் கூடப் பலருக்குப் பழக்கமில்லாத சொல் இது. யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் சிலவற்றில் புழக்கத்தில் இருக்கும் இந்தச் சொல் பல பிரதேசத்தவர்களுக்குப் புதிதுதான்.

ஒல்லன்னி என்பது நுளம்பு, மற்றும் பூச்சித் தாக்கங்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் சேலைகளை இணைத்துக் கூடாரம்போல தைத்து ஆக்கப்படும் தற்கால நுளம்புவலைக்கு ஈடான ஒன்றேயாகும். வீட்டிலுள்ள பழைய, பாவித்த, கழித்தொதுக்கப்பட்ட சேலைகளை இதற்காக அதிகம் பயன்படுத்துகிறார்கள். நகரங்களைப் போல கழிவுநீரக் கால்வாய்கள் காரணமாக வருடம் முழுதும் நுளம்புத் தாக்கம் கிராமங்களில் இருப்பதில்லை. மழைக்காலங்களில் மாத்திரமே நுளம்புத் தாக்கம் நிலவுவதால் அந்தக் காலங்களில் ஒல்லன்னி தயாரித்துக் நுளம்புத் தாக்கத்திலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்கிறார்கள். நுளம்புத் தாக்கம் மாத்திரமல்ல மழைக்காலக் குளிர், மழைக் காலத்தின் பின்பாக மாசி, பங்குனி மாதங்களில் நிலவும் கடும் குளிர் நிலையிலிருந்துகூட இந்தச் சேலைக் கூடாரம் பாதுகாப்பளிக்கிறது. சுருங்கச் சொன்னால், தற்கால நுளம்பு வலைகளில் இருந்து வேறுபட்டுப் பல்வேறு பயன்களைத் தரும் நம்மவர்களின் பழங்கால நுளம்புவலைக் கண்டுபிடிப்பே இந்த ஒல்லன்னி.

"ஒல்லன்னியைக் கட்டாமல் படுத்து நேற்று முழுக்க சரியான நுளம்புக்கடி"

"ஒல்லன்னிச் சீலையைத் தோய்ச்சுப் போடவேணும்"

"ஒல்லன்னிச் சீலை சரியாப் பழுதாப்போச்சுது... வேற சீலை தைச்சுப் போடவேணும்"

"ஒல்லன்னி கட்டுறதுக்கு இந்த அறைச் சுவரிலை ஆணி ஒன்டையும் காணேல்லை" ஆகியன ஒல்லன்னி என்கிற சொல் இடம்பெறும் பேச்சு வழக்குகளுக்கு உதாரணங்கள் சில.

# ஏன்...?

நட்சத்திரா

# அப்படி...?

48



## முச்சந்தியில் கழிப்புக் கழித்தல்

கழிப்புக் கழிப்பது என்பது இந்துக்கள், வைசர் மத்தியிலுள்ள சடங்குகளில் ஒன்றாக இருக்கிறது. மத மற்றும் இறை நம்பிக்கையுள்ளவர்கள் மத்தியில் இன்றுவரை தொடர்ந்து வருகிறது. இதில் செய்வினை, சூனியம், மாந்திரீகம் ஆகிய பல விடயங்கள் உள்ளடங்கியிருக்கிறது. வீடுகளில் மதச் சடங்குகள், ஆத்ம ஈடேற்றுக் காரியங்களை முடித்துவிட்டுக் கத்தி, நெருப்பு, நீர் சகிதம் நீத்துப் பூசணிக்காய், தேங்காய் எனப் பல பொருள்களைக் கடகத்தில் வைத்து எடுத்துச்சென்று முச்சந்தியில் வைத்துச் சடங்கு செய்கிறார்கள். தமக்குப் பிடித்த ஆவி, பேய் போன்றவற்றை விலக்குவதற்காகவே இவ்வாறு செய்யப்படுகிறது என்று காரணம் கூறப்படுகிறது. இதைச் செய்வதற்குரிய நம்பிக்கையாகப் பலவற்றைக் குறிப்பிட்டாலும் முக்கிய காரணம் தம்மைப் பீடித்திருக்கின்ற தீய சக்தியை விலக்குவது என்பதே இருக்கிறது.

இவ்வாறாக முச்சந்தியில் அல்லது பிரபல வீதியில் வைத்துக் கழிப்பைக் கழித்தல் சடங்கை நிகழ்த்துவதன் மூலம் அந்தச் சந்தியினூடாகச் செல்பவர்களைத் தாம் தம்மிடமிருந்து கழித்து அகற்றிய ஆவிகள், பேய்கள், தீய சக்திகள் தொற்றிக் கொள்ளும் என்று நம்புகிறார்கள். இதனால்தான் கழிப்புக் கழித்திருக்கும் இடங்களால் போகக்கூடாது என்று வயதானவர்கள் எச்சரிக்கிறார்கள். கழிப்புக் கழித்தவர்களும் இதையே கடைப்பிடிக்கிறார்கள். கழிப்புக் கழித்துள்ள இடம் வழியாகப் பயணிக்கின்ற அதே மத, சமயத்தினரும் இதையே நம்புகின்றனர். ஆக மொத்தத்தில் தம்மைப் பற்றிப் பிடித்துள்ள கெட்டதுகளை வேறு ஒருவரிடம் தள்ளிவிடுகின்ற கெட்ட நோக்கமே இந்தக் கழிப்புக் கழிக்கும் விடயத்தில் காணப்படுகிறது. இதை விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்த முடியாவிட்டாலும் நம்பிக்கையின் பொருட்டு அது உண்மை என நம்புபவர்களின் உள்நோக்கம் கெட்டதாகவே இருக்கிறது. இது அருவருப்பான ஓர் விடயம்தான்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.04.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781